# சுதந்திரன்
SUTANTIRAN

விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2008 | மாசி 5 | ஸபர் 26 (16-2-77) புதன் | புத்தகம் 30 | இதழ் 86


## பருத்தித்துறை கடலோரத்தில் பொன்னாவின் பூதவுடல் தகனம்!



# அமரர் ஜீ ஜீக்கு ஒரு இலட்சம் மக்கள் அஞ்சலி!

வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வேதனை முகத்தினராய் வெய்துயிர்த்து விம்மி விம்மியழுதிட- ஆற்றுவாரும் தேற்றுவாருமின்றி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கண்ணீர் சொரிந்தபடி நின்றிட— சமுத்திர மங்கை ஆற்ருதுதன் அலைக்கரங்களால் நிலமகளைக் கட்டியணைத்து ஒப்பாரி வைத்திட— அரை நூற்றுண்டு காலம் ஈழத் தமிழர்களின் அரசியல் வாழ்வுடன் தம்மைப் பின்னிப் பிணைத்துக்கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களில் ஒருவரும் சட்டத்துறையில் புதிய சரித்திரம் படைத்தவருமான அமரர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் பூதவுடல் தமிழீழத்தின் வட கோடியிலுள்ள பருத்தித்துறை கடலோரத்தில் ஞாயிறு (13-2-77) மாலை எரியூட்டப்பட்டது.

"உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட கோபுர அமைப்புக் கொண்ட சிதையின்மீது வைத்து பொன்னாவின் பூதவுடலுக்கு அவரது மகன் குமார் தீ மூட்டியபோது அங்கு கூடியிருந்த பல ஆயிரக்கணக்கான தமிழ்த்தாய்மார்கள் வாய்விட்டுக் கதறிய காட்சி உள்ளத்தை உருகச் செய்தது.

திரு. பொன்னம்பலம் அவர்களின் மறைவையொட்டி அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துமுகமாக 12,13ம் திகதிகளில் (சனியும் ஞாயிறும்) வட மாகாணம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டும், கறுப்புக் கொடிகள் உயர்த்தப்பட்டும், படக் காட்சிகள் நிறுத்தப்பட்டும் காணப்பட்டன. தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக அமரருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக யாழ்ப்பாணத்தில் திரண்டனர்.

12ம் திகதி சனிக்கிழமை காலை கொழும்பிலிருந்து விசேட விமானத்தில் பூதவுடல் பலாலி விமான நிலையத்துக்கு எடுத்துவரப்பட்டது. மூதறிஞர் தந்தை செல்வா அவர்களும் பலாலி விமான நிலையத்திற்கு வந்திருந்தார். பூதவுடலை,கூட்டணித் தலைவர்களான நாவலர் அமிர்தலிங்கம், செ. இராசதுரை, சி. கதிரவேற்பிள்ளை, வி. ஆனந்தசங்கரி, க. ஜெயக்கொடி, கா. பொ. இரத்தினம், தா. சிவசிதம்பரம், மு. சிவசிதம்பரம், தா. திருநாவுக்கரசு, அடங்காத்தமிழர் சி. சுந்தரலிங்கம் ஆகியோர் விமானத்தி

—3-ம் பக்கம் பார்க்க

## அரசிலிருந்து வெளியேற கம்யூனிஸ்டுகள் முடிவு?

அரசாங்கத்திலிருந்து வெளியேறுவது என்ற இறுதி முடிவை இன்று புதன் கிழமை கொழும்பில் கூடும் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய அரசுப்பேரவையை எதேச்சாதிகாரமாக மூன்று மாதத்துக்குப் பின் போட்டது ஜனநாயக விரோதச்செயல் என்றும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு தெரி

—4-ம் பக்கம் பார்க்க

## சிறைமீண்ட இளைஞர் தலைவர்கள் கொழும்பில் உரையாற்றுகின்றனர்!







வெலிக்கடை வெஞ்சிறையிலிருந்து விடுதலையான தமிழ் இளைஞர் தலைவர்கள் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் ஆகியோர் முறையே 'உலக அரங்கில் தமிழீழப் போராட்டம்', "தமிழீழம் பெறுவது எப்படி?" 'ஏன் வேண்டும் தமிழ் ஈழம்' ஆகிய தலைப்புக்களில் 15-2-77 செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் உரையாற்றுகிறார்கள். இக் கூட்டத்தை த. இ. பேரவை கொழும்புக்கிளை ஒழுங்கு செய்துள்ளது. த. இ. பேரவை கொழும்புக் கிளைத் தலைவர் திரு. ஆ. ரகுபதிபாலசிறிதரன் கூட்டத்துக்கு தலைமைதாங்குகிறார். கூட்டத்துக்கு அனுமதிச் சீட்டு உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். அனுமதிச் சீட்டுக்களை மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

## சிறைமீண்ட இளைஞர்களுக்கு மாலைகள் வேண்டாம்!

சிறைமீண்ட தமிழ் இளைஞர்களுக்கு மாலையணிவிப்பதில் வீணாக பணத்தை செலவிடவேண்டாமென்றும் மாலைகளுக்கு செலவிடும் பணத்தை இயக்க நிதிக்காக குறித்த இளைஞர்களிடமே ஒப்படைக்கும்படியும் தமிழ் மக்களுக்கு த. இ. பேரவையின் கொழும்புக் கிளையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## தனிநாடு கோரிக்கையையே கூட்டணி பா. உ. க்கள் முன்வைப்பர்!

இம்மாதம் 21ம் திகதி சிறிலங்கா பிரதமரின் அழைப்பின் பேரில் அவரது தலைமையில் பண்டாரநாயகா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தமிழ்பேசும் பிரதிநிதிகளின் மாநாட்டின் போது, தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ. க்கள் வட்டுக்கோட்டை மாநாட்டுப் பிரகடனத்தை — அதாவது தனிநாடு கோரிக்கையை— மட்டுமே அழுத்தி வலியுறுத்திப் பேசவேண்டுமென்று கூட்டணியின் தலைமைப்பீடம் அவர்களுக்கு கட்டளையிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

—3-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை வீரர் ஜீ. ஜீ.

“தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா” என்ற தாரக மந்திரத்தை உச்சரித்து “நீண்ட காலம் தூங்கிக்கிடந்த தமிழ் இனத்திற்கு தமிழ் இன உணர்வினை ஊட்டிய பெருமகன் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களேயாகும். அதுமட்டுமல்ல ‘இந்தியாவிலே ஜின்ஞ, இலங்கையிலே பொன்ஞ” என்று நாம உச்ச நிலையில் குரல் எழுப்பும் வகையில் தமிழன் தனித்து தனிநாட்டில் வாழ்கின்ற போதுதான் அவனுக்கு வாழ்வு உண்டு என்பதனை அன்றே உணர்த்தியவர் அவர் என்பதனை நாம் மறக்க நினைத்தாலும் மறக்க முடியாது.

அவரின் அரசியல் வாழ்வில் இடைக்காலத்தில் அவர் மேற்கொண்ட அரசியல் சிந்தனை எம் வந்தனைக்குரியதாக விளங்காததோடு அவரோடு பல தடவைகள் மாறுபட்டு முட்டிமோதவேண்டிய நிலை எமக்கு ஏற்பட்டதனை நாம் மறுப்பதற்கில்லை. குறிப்பாக ஒரு வேளையில் அவர் இல்லத்தில் நடைபெற்ற உரையாடலின் போது ஏற்பட்ட கருத்து மோதலில் I am sorry to speak to you in this tone under my roof, but I can’t help it when you come here with preconceived notions” (யான் இவ்விதம் என் வீட்டிலேயே உம்முடன் மோதுவதற்காக வருந்துகின்றேன். ஆனால் ஏற்கெனவே எடுத்த சில முடிவுகளுடன் உரையாட என்னிடம் வந்தால் நான் வேறு என்ன செய்ய முடியும்)என்று ஏறக்குறைய இருபது ஆண்டுகட்கு முன்பு அவர் என்னுடன் முட்டி மோதிய நிகழ்ச்சியை இன்று எண்ணிப்பார்க்கின்ற போது அவர் என்னுடன் கோபித்ததைதை முக்கியமாகக் கருதாது அவர் கையாண்ட கவர்ச்சிமிக்க ஆங்கிலச் சொல்லாட்சியையே மீண்டும் நினைவுபடுத்தி மகிழ்கிறேன். இதேபோன்றுதான் 1968ல் சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின்போது அறிஞர் அண்ணாவின் உரையை யடுத்து அவரோடு உரையாடியபோது அவர் தனக்கேயுரிய புன்முறுவலை வருவித்துக்கொண்டு “have you come here to heckle me?” (என்னை நீர் இங்கு கிண்டல் செய்யவா வந்துள்ளீர் என்று கேட்டபோது நான் சிரித்துக்கொண்டு “I know the place and time as to what I should do”(எங்கேஎதைஎப் படிச்செய்யவேண்டும்என்று எனக்குத்தெரியும்) என்று கூறியபோது அவர் சிரித்துக் கொண்டு” “you are a smart guy” (நீ ஒருகெட்டிக்காரன்) என்று முதுகில் தட்டிக்கூறிய சொற்களும், அண்மையில் கூட என்னைப் பற்றி அவர் சில நண்பர்களுடன் உரையாடியபோது “He is a genuine chap” (அவன் உண்மையானவன்) என்று கூறிய சொற்கள் இன்றும் என செவிகளில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன.

பலவேளைகளில் அவரோடு அவர் . கருத்துக்களோடு முட்டிமோதியபோதும் ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய பல புணபுகள் அவரிடம் குடிகொண்டு இருப்பதை நான் கண்டு வியந்ததும் உண்டு. குறிப்பாக அவரின் கம்பீரத்தோற்றம், ஒளி படைத்த கண்கள், இவையனைத்தையும் மிஞ்சுகின்ற முறையில் அவர் கையாண்ட ஆங்கிலச்சொல்லாட்சியை நாம் என்றும் மறக்கமுடியாது.

“Donoughmore means Tamils no more”(டொனமூர் எனின் இனிமேல் தமிழர் இல்லை) என்று தமிழர் சார்பில் குரல் எழுப்பிய சேர். பொன். இராமநாதன் மறைவிற்குப்பின் ஏற்பட்ட பெரும் வெற்றிடத்தை மிகத்திறமையுடன் நிரப்பி “Soulbury has come to bury the soul of the Tamils” (தமிழனின் ஆன்மாவைப் புதைக்க வந்துவிட்டார் சோல்பரி) என்று குரல் எழுப்பி ஐம்பதுக்கு ஐம்பது கோரிக்கையை சிறுபான்மை மக்கள் சார்பில் விடுத்து சோல்பரி ஆணைக்குழுவிற்கு எதிராக அவர் நிகழ்த்திய மிக நீண்ட ஆணித்தரமான வரலாற்றுச்சான்று மிக்க அழகு ஒழுகும் ஆங்கிலச் சொற்பொழிவையும் எந்தவொரு தமிழனும் மறக்க நினைத்தாலும் மறக்கமுடியாது வரலாற்றில் இடம் பெறும் முக்கியத்துவம் வாய்ந்தசொற்பொழிவு இச் சொற்பொழிவாகும்.

இச் சொற்பொழிவினைச் செவிமடுத்த சோல்பெரி அவர்கள் “I violently disagree with the views expressed by Mr. G. G. Ponnambalam but he has mesmerised us with his sweet command of English language. We have never heard an oration like this” (அவர் கருத்துக்களோடு முற்றாக மாறுபட்ட போதும் இத்தகைய சொற்சுவைமிக்க நீண்ட ஆங்கில உரையினை இதுகாலவரையில் நாம் என்றும் கேட்டதில்லை) என்று கூறிய கூற்றுக்கள் நாம் என்றும் நினைவில் நிறுத்தவேண்டிய கூற்றுக்களாகும்.

**ஈழவேந்தன்**

அவரின் சட்டத்துறைப் பணி குறிப்பாகக் குற்றவியல் சட்டத்துறையில் (Criminal Law) அவர் நிலைநாட்டிய புகழ் சட்டத்துறை வரலாற்றில் தனித்த இடம் பெறத்தக்க வரலாறாகும். எனினும் அதன் விரிவு இங்கு வேண்டாம். உண்மையில் அது தனித்து வரையப்பட வேண்டிய வரலாறாகும்.

இப்பெருமகன் மீண்டும் நீண்டகால இடைவெளிக்குப்பின்பு (ட்ரயல்—அற்—பார்) நடுவர் அற்ற நீதிமன்றத்தில் ஈழம்வாழ் தமிழர் சார்பில் தனது தள்ளாத வயதில் அதுவும் நோய் வாய்ப்பட்டுள்ள வேளையில் எழுப்பிய சட்டநுணுக்கங்கள், வாதிட்ட திறமை பழைய பொன்னம்பலம் அவர்களின் வாதத்திறனை மீண்டும் இனிக்க இனிக்க சுவைக்கும் வாய்ப்பினை எமக்குத்தந்தது. குறிப்பாக ஒரு வாதத்திலே அவசர காலச்சட்டம், அவசரத்தில் நிறைவேற்றப்பட்டதினுல் செல்லுபடியாகாத தன்மையை பெற்றுவிட்டதென் பதனை புன்முறுவலோடு உரிய ஆங்கிலச்சொற்களைக் கையாண்டு புட்டுக்காட்டிய பாங்கினை இன்று நினைக்கின்றபோதுகூட மெய் சிலிர்க்கிறது.

இவையனைத்திற்கும் மேலாக தன் சட்டவாதத்தின் இறுதிப்பகுதியில் இனத்தாலும் மொழியாலும், கலைகளாலும், ஏற்றமிகு நாகரிகத்துறையினுலும், தனித்ததொரு பண்பாட்டு நெறியினுலும், வளமிக்க வரலாற்றுச்சான்றினுலும் ஈழம்வாழ் தமிழ் மக்கள் தனித்தோரே என்பதனையும் அவர் தனித்து தமிழரசை நிறுவி தமிழ் ஈழத்தில் வாழ்ந்தாற்தான் அவர்களுக்கு வாழ்வுஉண்டு என்பதை உணர்த்தும் முறையில் உரைத்த உரைகள் எமக்கும் எம் வழித்தோன்றல்களுக்கும் அவர் விட்டுச்சென்ற என்றும் மறக்கமுடியாத எம் நெஞ்சில் ஆழமாகப்பதித்திட வேண்டிய ‘பொன்னம்பலம் தந்த பொன்மொழிகளாகும்.’

தமிழ்த் தலைவர்களுக்கு எதிரான ட்ரயல்-அற்-பார் வழக்கு நடைபெற்றபோது முதல்நாள் நிகழ்ச்சியில் பார்வையாளனுகக் கலந்து கொள்ள எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அப்பொழுது நீதிமன்றத்திலிருந்து தந்தை செல்வாவை அரவணைத்தபடி அவர் வெளிவரும்போது பின்வரும் சொற்களை தனக்கேயுரிய மிடுக்கான ஆங்கில நடையில் மொழிந்தார். அவர் செப்பிய சொற்கள் பின்வருமாறு: “Chelva I am old. I am sick. Doctors have advised me to take complete rest. But I am here because the Tamil cause is so great. I do not know whether I will survive the full case. I will do my best. I hope my juniors will do their part” (செல்வா நான் கிழண்டிப் போனேன்; எனக்கு நோய் பிடித்துவிட்டது. டாக்டர்கள் என்னை முழு ஓய்வு எடுக்கும்படி கூறுகின்றூர்கள். ஆனல் தமிழரை எதிர்நோக்கும் பிரச்சினையோ மிகப்பெரிதாக இருக்கின்றது! வழக்கு முடியும்வரை நான் இருப்பனே தெரியாது. எந்நிலையிலும் என் கடமையை செய்தே தீரவேண்டும். அதற்காக இந்நிலையிலும் நான் வாதிட வந்துள்ளேன். இளம் சட்டத்தரணிகள் எனக்குபக்கத்துணையாக இருப்பார்கள் என நம்புகிறேன்”) என்று கூறியபோது தந்தை செல்வா அவர்கள் தனக்கேயுரிய முறையில் புன்முறுவல் பூத்து மிக மெல்லிய குரலில் ‘ஆம்’ என்று கூறியகூற்று கண்கொள்ளாக் காட்சியாக என் நெஞ்சில் என்றும் நிலைத்துநிற்கும்.

ஈழம்வாழ் தமிழ்மக்களின் பிரச்சினையில் மட்டும் அவர் அக்கறை கொள்ளாது தாயகத்து தமிழர் வாழ்விலும் அக்கறைகாட்டும் முறையில் தான் கலைஞர் கருணநிதியின் வழக்கில் ஈடுபட்டிருந்தது, அவர் இறுதிவரையும் தமிழன் நல்வாழ்வில் நாட்டம் கொண்டிருந்தார் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது. அவரின் சடுதியான இம்மறைவு எமக்குப் பேரிழப்பு என்பதனை ஏற்கும் நாம் இறைவனின் தீர்ப்பை —இயற்கையின் கட்டளையை மீறுவதற்கு நாம்யார் என்று கூறி ஆறுதல் அடைவோமாக. அவரின் இன்னுயிர் இறையோடு கலந்து இன்புறுக என இறைஞ்சி நிற்கின்றேம்.

# அமரர் ஜீ.ஜீ. மறைவுக்கு நாடெங்கிலும் அஞ்சலி!

“சென்ற அரை நூற்றுண்டு காலமாக ஈழத் தமிழ் மக்களின் அரசியல் சமூக வாழ்வில் அணையா ஜோதியாக ஒளிவிட்டுப் பிரகாசித்த தீபம் அணைந்ததையிட்டு தமிழ் மக்கள் குறிப்பாகப் பருத்தித்துறை வாழ் மக்கள் ஆற்ருெணுத் துயரில் ஆழ்ந்துள்ளோம்.

1934ம் ஆண்டு சட்டசபைக்கு அன்னுரை முதன் முறையாக அனுப்பிவைத்துப் பெருமையுற்ற பருத்தித்துறை மக்களுக்கு அன்னுர் 18 ஆண்டுகள் தொடர்ச்சியாக பிரதிநிதியாகவிருந்து இப் பகுதிக்குப் பெருமை தேடித் தந்ததமையை மறக்க இயலாது.

தமிழ் மக்களின் ஏற்றங்கருதி 1944ல் அவர் ஆரம்பித்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பலம் வாய்ந்த சக்தியாக இறுதிக் காலம் வரை விளங்கினுர். தமிழர்களின் உயர்ச்சிக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் கூட்டுத்தலைவர்களுள் ஒருவராக பணியாற்றினுர்.அண்மையில் தமிழ்த் தலைவர்கட்கெதிரான வழக்கில் ஏற்பட்டு சட்ட உலகம் வியக்கும் வண்ணம் வாதிட்டு தமிழன் பெருமையை உலகறியச் செய்திருந்தார். ஐ. நா. சபையில் அன்னுர் நிகழ்த்திய உரை மறக்க முடியாதது.

இக் கால கட்டத்தில் சிறந்த அரசியல், சமூக, சமய. சட்ட மேதையான திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் அவர்கள் திடீரென மறைந்தமை தமிழ் மக்கட்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பாகும்.

—இவ்வாறு பருத்தித்துறை தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளைகள் சார்பில் அதன் செயலாளர் சட்டத்தரணி இ. து. ரத்தினசிங்கம் வெளியிட்ட இரங்கற் செய்தியிற் கூறியுள்ளார்.

பருத்தித்துறை தொகுதி த. இ. பேரவை அமைப்பாளர் சட்டத்தரணி கனக—மனேகரன் அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில் ஜீ. ஜீ. மறைவு ஈடு செய்ய முடியாதது என்று தெரிவித்துள்ளார்.

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் இழப்புக் குறித்து பின்வரும் சங்கங்கள், மன்றங்கள், கூட்டணிக் கிளைகள், சார்பிலும் சுதந்திரன் மூலம் அனுதாபம் தெரிவிக்கின்றனர்.

(1) புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் சி. இலிங்கவேலாயுதம்.

(2) கொழும்பு பண்டாரநாயக மாவத்த, ஸ்ரீ சண்முகானந்த கானசபாவின் சார்பில் அதன் இணைச் செயலாளர்கள் க. சி. சண்முகம், ச. சிவப்பிரகாசம்,

(3) தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் செயலாளர் நாயகம் ஐ. தி. சம்பந்தன்.

(4) கலைஞர் கருணநிதி பொதுப்பணி மன்ற செயலாளர் கம்பனைதாசன்.

(5) உடுப்பிட்டி, த. இ. பேரவை செயலாளர் ச. செந்தூரான்.

(6) கருங்காலிச்சோலை—முன்னுள் தமிழ் பேசும் இளைஞர் மன்ற செயலாளர் இரா. அழகிரிசாமி.

(7) அம்பாறை மாவட்ட த. இ. பேரவை செயலாளர் பொன். கோபாலன்.

(8) அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் சோ. யோகேஸ்வரன்.

(9) உடப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் வீர சொக்கன்.

(10) வண்ணை நகர் இளைஞர் முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் த. சிவஞானரஞ்சன்.

(11) மட்டக்களப்பு—கூழாவடி, மாமாந்தம், சீலாமுனை த.வி. கூட்டணிக் கிளையின் சார்பில் அதன் செயலாளர் க. நடராசா.

(12) களுதாவளை கூட்டணிப் பிரமுகர் ஞா. பழனித்தம்பி—

(13) புத்தளம் தமிழ் பேசும் இளைஞர் மன்ற இணைச் செயலாளர் கே. கே. மயில்வாகனம்.

(14) மதுரங்குளி தமிழ் பேசும் இளைஞர் மன்றத்தின் சார்பில் அதன் செயலாளர் எம்.ஐ.எம். எஹியா.

(15) பொத்துவில் இந்து இளைஞர் மன்றத்தின் சார்பில் தலைவர் திரு. எம். கனகரத்தினம், செயலாளர் திரு. பெ. சண்முகநாதன்.

(16) நாவலப்பிட்டி பெ. ராமானுஜம்.

(17) பட்டிருப்புதொகுதி த.வி. கூட்டணி அமைப்புச் செயலாளர் த. கணேசபிள்ளை.

(18) தமிழ் இளைஞர் பேரவை சித்தாண்டிக் கிளை, தமிழ் இளைஞர் பேரவை, கல்குடாத் தொகுதிக் கிளை,

(19) குருநகர் சன சமூக நிலையத் தலைவர் திரு கிறெகரி கிறிஸ்ரியன்

(20) அரசாங்க எழுதுவினைஞர் சங்க பொதுச்

—3-ம் பக்கப் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விவசாயிகளுக்கு தண்ணீர் வழங்கவும் இனவெறிச் சிங்களவர்கள் எதிர்ப்பு!

மட்டக்களப்புப் பகுதியில் செய்கை பண்ணப்படும் காணிகள் 90000 ஏக்கர். இதில் நீர்ப்பாய்ச்சும் குளங்கள் மூலம் செய்கை பண்ணப்படுவது 40752 ஏக்கர்களாகும். வானம் பார்த்த பூமி 49248 ஏக்கர்களாகும். விகிதாசாரப்படி இது 55 வீதமாகும். இவற்றில் வெல்லாவெளி APCயின்கீழ் 4470 ஏக்கர்! பழுகாமம் APCயின்கீழ் 5408 ஏக்கர். மண்டூர் APCயின்கீழ் 7878 ஏக்கர்;

மேற்கூறிய காணிகள் கல்லோயாத் தண்ணீராலும் நவக்கிரித் தண்ணீராலும் நீர்ப்பாய்ச்சப்படுவனவாகும். ஆனால் மார்கழி மாதம் 27ம் திகதிக்குப் பின் மட்டக்களப்புப்பகுதியில் பரவலாக மழை பெய்யவில்லை. எனவே வானம்பார்த்த காணிகளுக்கும் நீர்ப்பாய்ச்சல் உள்ள காணிகளுக்கும் தண்ணீர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அமிர்தம் கக்கும் நேரத்தில் நெற்பயிர்கள் காய்ந்துவிட்டது.

இந்த நிலைமை தடுப்பதற்கு மட்டக்களப்பு பொறியியல் பகுதியைச் சேர்ந்த பொறியியலாளர், அம்பாறைப் பொறியியலாளரைச் சந்தித்து அரசியல் அதிகாரிகளுடைய அனுமதியுடன் எல்லாக் காணிகளுக்கும் தண்ணீர் விநியோகிக்குமாறு உத்தரவிடப்பட்டது. உத்தரவின் அடிப்படையில் தும்பங்கேணியைச் சேர்ந்த உதவிப் பொறியியலாளர் திரு. சிவானந்தன் தண்ணீரைத் திறந்து தும்பங்கேணி, வெல்லாவெளி 36 39,40ம் கிராமங்களுக்கு விநியோகித்தார். இதைப் பட்டிருப்புத் தொகுதியில் உள்ள சிங்களக் குடியேற்றவாசிகள் தடுத்து நிறுத்தினர். பலத்த பந்தோபஸ்துடன் ஏற்படுத்தப்பட்டும் தடை செய்யப்பட்டது.

இதை அறிந்த உதவிப் பொறியியலாளர் சிவானந்தன் அங்கு சென்று பார்க்கப்போன இடத்தில் சிங்களவர் துவக்குடன் வந்து ஓடடா பறத்தெமிளா படுவா உனக்கென்னடா தண்ணி என்று கூறித் துவக்கை நீட்டினர்; அன்னார் மயிரிழையில் உயிர் தப்பினர். இது மட்டுமன்று அங்குள்ள தமிழ் குடி மக்களையும் "பறத்தெமிளா 'உனக்கென்னடா தண்ணி" என்று தமிழ் மண்ணில் குடியேறிய சிங்கள வெறியர்கள் சீறுகிறார்கள்.

## வந்துகுடியேறியோர் நில சொந்தக்காரர்களை மிரட்டுகிறார்கள்!

### மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் விவசாயிகள் அவதி!

இது ஒருபுறம், மறுபுறம் அக்கிராமவெளிக் காணிகள் பரம்பரையாகத் தமிழருக்குச் சொந்தமான காணிகள் அவற்றை அம்பாறை மாவட்ட அதிகாரி சோமரத்தின செய்கை பண்ணப்படவில்லை என்று கூறி "தமிழனுக்கு என்னடா காணி அம்பாறை மாவட்டத்தில்" என்று கூறி தமிழருக்குள்ள காணிகளை வலுக்கட்டாயமாகப் பறித்துச் சிங்களக் குடியேற்றவாசிகட்குப் பகிர்ந்துகொடுக்கின்றான்.

எனவே எமது நிலம் பறிபோவதை மனதிற்கொண்டு பாராளுமன்றத்தில் தமிழ் பிரதிநிதிகள் கொடுப்பார்களா? தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா? பத்திரிகையில் கண்டன அறிக்கைவிடுவார்களா? எங்கள் துயரைத் தீர்ப்பார்களா? அரசாங்கத்திற்கு ஒத்தூதி அம்மையாரின் சீலைத்தலைப்பில் தொங்கும். எமது மட்டக்களப்பு வட்டார அரசியல் அதிகாரி ராஜன் செல்வநாயகம், தம்பிராசா பா. உ. கண்விழிப்பார்களா? என்று குடியேற்றவாதிகள் அங்கலாய்க்கின்றார்கள்.

---

## அமரர் ஜீ.ஜீ. மறை..

—2-ம் பக்கத் தொடர்

செயலாளர் சி. பேரின்பநாயகம்.

(21) மிருசுவில் கணேசானந்தா சனசமூக நிலையச் செயலாளர் தி. சுகுமாரன்.

(22) கல்ஓயா இந்து பரிபாலன சபைப் பொருளாளர் நோ. மணிவாசகன்.

(23) நயினாதீவு கிராம சபை உபதலைவர் திரு. அ. நல்லையா.

(24) இலங்கைப் பல்கலைக் கழக யாழ் வளாக தமிழ் மன்றத் தலைவர் திரு. இ. சி. செல்வேந்திரன்.

(25) மிருசுவில் த. வி. கூட்டணிக் கிளைச் செயலாளர் சி. சிவகுருநாதன்.

(26) காரைதீவுப் பிரதேச தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் கே.பி. சோமநாதன்.

(27) வட அல்வை தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் அல்வை—தர்மநாதன்.

(28) ஈழத் துறைமுக ஊழியர் சங்க பொதுச் செயலாளர் இ. இரத்தினசிங்கம்.

(29) இளம் கலைஞர் முன்னேற்ற மன்ற செயலாளர் கே. சி. ஆனந்தன்.

(30) துறை நீலாவணை த. வி. கூட்டணி கிளைத் தலைவர் பா. அப்பாக்குட்டி.

(31) அராலி தெற்கு த. இ. பே. தலைவர் மா. பன்னீர்ச் செல்வம்.

(32) புத்தளம் தமிழ் பேசும் இளைஞர் மன்றத்தின் சார்பில் அதன் இணைச் செயலாளர்கள் கே. கே. மயில்வாகனம், செல்வராசா.

---

## அமரர் ஜீ ஜீ.க்கு ஒரு இலட்சம் மக்கள் அஞ்சலி....

—1-ம் பக்கத் தொடர்

லிருந்து தோள்கொடுத்து சுமந்து வந்து இரதத்தில் ஏற்றினர். இரதம், உதயசூரியன் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விமான நிலையத்திலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணித் தலைமைச் செயலகத்துக்கு மோட்டார் ஊர்வலம் புறப்பட்டுச் சென்றபோது, வழி நெடுகவுள்ள ஒவ்வொரு ஊரிலும் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாகத் திரண்டுநின்று இறுதி அஞ்சலி செலுத்தினர். பாடசாலை மாணவ மாணவியரும் அஞ்சலி நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

பலாலியிலிருந்து பத்து மைல் தூர்த்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைச் செயலகத்தை மோட்டார் ஊர்வலம் வந்தடைய மூன்றரை மணி நேரம் பிடித்தது. கூட்டணி அலுவலகத்தில் வைத்து, கூட்டணித் தலைவர் தந்தை செல்வா மறைந்த தலைவரின் பூதவுடலுக்கு மாலைசூட்டி இறுதி அஞ்சலியை தெரிவித்துக்கொண்டார். கூட்டணி செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம், மு. சிவசிதம்பரம் ஆகியோரும் கூட்டணியின் சகல பா. உ.க்களும் அலுவலகத்தில்வைத்து கூட்டணியின் சார்பில் மறைந்த தலைவருக்கு தமது இறுதி மரியாதையை தெரிவித்துக்கொண்டனர்.

பின்னர் அங்கிருந்து ஜீ ஜீ. அவர்களின் பூதவுடல் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலிக்காக யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வைக்கப்பட்டது. பொதுமக்கள், சிங்கள நாட்டு அரசியல் தலைவர்கள், அரசியற் சார்பற்ற பிரமுகர்கள், சட்ட வல்லுனர்கள், நீதிபதிகள், ஏனைய அரசியற் தலைவர்கள் ஆகியோர் தமது இறுதி அஞ்சலியை தெரிவித்தனர்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் மேடையொன்று அமைக்கப்பட்டு அங்கு இரங்கல் உரைகள் நிகழ்த்தப்பட்டன. இந்த இரங்கல் நிகழ்ச்சிக்கு, சட்டத்தரணி தா. சங்கரப்பிள்ளையின் வேண்டுகோளின் பேரில் கூட்டணி செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் தலைமைதாங்கினார். அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் குமாரசூரியர், ஐ. தே. க. சார்பில ஜே. ஆர். ஜெயவர்த்தன, இ. தொ. கா. சார்பில் திரு. அண்ணாமலை, த. இ. பேரவை சார்பில் சிவதாசன், கூட்டணிதேசிய பேரவை உறுப்பினர்கள் சார்பில் வி. ஆனந்தசங்கரி, தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் கூட்டணி செயல் அதிபர்களில் ஒருவருமான மு. சிவசிதம்பரம் ஆகியோர் இங்கு இரங்கலுரை நிகழ்த்தினார்கள். திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் பேசியபோது ஒரு கட்டத்தில் மக்கள் கண்ணீர்விட்டு அழுதனர்.

13-2-77 ஞாயிறு காலை 9 மணிக்கு யாழ்பபாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக புறப்பட்டது. சுமார் 25மைல் தூரம் நடைபெற்ற இந்த இறுதி ஊர்வலத்தில் வழிநெடுக தமிழ் மக்கள் கூட்டம் பல்லாயிரக்கணக்கில் ஆங்காங்கு ஒவ்வொரு சிற்றூர், பேரூர்களிலும் திரண்டு நின்று அஞ்சலி செலுத்தியது.

ஊர்வலம் பருத்தித்துறை தொகுதியை அடைந்தபோது உடுப்பிட்டி பா. திரு. க. ஜெயக்கொடியும், பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினமும், த. இ. பேரவை த. வி. கூட்டணிக் கிளையினரும் ஊர்வலத்துடன் கலந்துகொண்டனர்.

மாலை பருத்தித்துறை கடற்கரையில் அமைக்கப்பட்டிருந்த சிதையில், ஒரு இலட்சம் மக்கள் கதறியழ ஜீ. ஜீ. அவர்களின் சிதைக்கு தீ மூட்டப்பட்டது.

உணர்ச்சியலை பாய, உள்ளம் குமுறி நின்றமக்கள், தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களின் தேறுதல் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு, அமைதியுடன் அங்கிருந்து திரும்பினர்.

---

## தம்பிலுவில் திருக்கோவில்

### துக்கம் அனுட்டிப்பு!

தமிழ் தலைவர்களில் ஒருவரும் சிறந்த சட்டமேதையுமாகிய பெரியார் ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் மறைவு குறித்து தமிழ் வர்த்தகர்கள் தங்கள் கடைகளை அடைத்தும், மாணவ மாணவிகள் பாடசாலைக்குச் செல்லாமலும் தங்களது அனுதாபத்தைத்தெரிவித்துக்கொண்டனர். மேலும் தமிழ் இளைஞர் பேரவையினர் வீதிகளிலும் தந்திக் கம்பங்களிலும் வெள்ளை கறுப்பு நிறத்திலான துணிகளை வீதி எங்கிலும் பறக்கவிட்டு தங்கள் துக்கத்தை அனுட்டித்தனர். பாடசாலைகளில் வாத்திமார்களைத் தவிர ஒரு பிள்ளை தானும் பாடசாலையில் காணக்கூடியதாக இல்லை. வீதிகளில் அன்னாரின் மறைவு குறித்து சுலோகங்கள் வரையப்பட்டிருந்தன.

---

## காலியிலும்

### துக்க அனுட்டானம்

காலி நகரில் உள்ள எல்லா தமிழ்கடைகளும் உத்தமர் ஜீ. ஜீ. யின் மறைவையொட்டி வெள்ளைக் கொடிகள் கட்டி துக்கம் அனுட்டித்தார்கள் குறிப்பாக 11-2-77ல் காலி கொழும்பு வீதியில் உள்ள எல்லா தமிழ் கடைகளும் ஒருநாள் அடைத்து அனுதாபம் தெரிவித்துக்கொண்டார்கள்.

---

## நுவரெலியாவில் அனுதாப அஞ்சலி!

நுவரெலியாவில் லவர்ஸ் லீப் தோட்ட மலையக மறுமலர்ச்சி மன்ற இளைஞர்கள் 12-2-77 அன்று கோலாகலமாக நடததவிருந்த தமிழ் விழாவை தலைவர் திரு. ஜீ. ஜீ. அவர்களின் மறைவின் காரணமாக ஒத்திவைத்து அதே தினத்தில் அனுதாப அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடத்தியது. இளைஞர்கள் கறுப்புக்கொடியுடன் ஒரு மைல் தூரம் மௌன ஊர்வலம் வந்து லவர்ஸ்லீப் தோட்டபொதுமைதானத்தில் செல்வன் ரஞ்சன் அவர்களின் தலைமையில் கூட்டத்தை நடத்தினர் தலைவர் க. குமாரவேல் செயலாளர்: ஆ. தம்பிராசா. பொருளாளர் வே. ராஜலிங்கம். தனாதிகாரி சி. ரட்ணசிங்கம். உபதலைவர் ப. நமசிவாயம் உட் [illegible]

---

## நாவலப்பிட்டியிலும் துக்கம்

அமரர் ஜீ. ஜீ.யின் மறைவு மலைநாட்டையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது என்பதை மலையகத்தின் சிறு நகரங்களிலும்கூட உள்ள சிறு கடைகளிலும் துக்கத்தை வெளிப்படுத்த வெள்ளை—கறுப்பு கொடிகள் தொங்கவிடப்பட்டன.

நாவலப்பிட்டி நகரிலும் சகல தமிழர் கடைகளிலும் ஜீ. ஜீயின் மறைவுச் செய்தியைக் கேட்ட மாத்திரத்தில் வெள்ளைக்கொடிகளை ஏற்றி துக்கம் அனுட்டித்தனர்.

---

## தனிநாடு கோரி...

—1ம் பக்கத் தொடர்

கூட்டணியின் முதலாவது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ்ஈழத் தீர்மானத்தையே மாநாட்டின்போது திட்டவட்டமாக வற்புறுத்த வேண்டுமென்றும், அதற்குக் குறைந்த எந்த நிலைக்கும் இறங்கி எவரும் பேசக்கூடாது என்றும், தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்றுமட்டுமே தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதித்துவ நிறுவனம் என்பதையும் தீர்க்கமாக எடுத்துக் கூற வேண்டுமென்றும் கூட்டணி பா. உ. க்களுக்கு தலைமைப்பீடம் உத்தரவிட்டுள்ளதாக தெரிகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ. க்களின் சார்பில் இந்த மாநாட்டின்போது கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை மட்டுமே பேச்சாளராக இருக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடை வெஞ்சிறைக்கோட்டம் திறந்தது!

# விடுதலைச் சிறுத்தைகள் வெளியே வந்தன!

சிங்கள சிறிலங்காவின் வெலிக்கடை வெஞ்சிறைக் கோட்டம், சென்ற சனியும் ஞாயிறும் திறந்தது; விடுதலைச் சிறுத்தைகளான தமிழ்ஈழ இளைஞர்கள், ஆண்டுக்கணக்காக சிறைவாசத்தை அனுபவித்தும், எழுச்சியும் உணர்ச்சியும் அணுவளவும் குன்றாதவர்களாய் வெளியே வந்தனர். அவர்களை தமிழ்ஈழத் தாய் கட்டித்தழுவி உச்சிமோந்து வரவேற்கக் காத்திருக்கிறாள்.

விசாரணையின்றி சிறைச்சாலையில் நீண்டகாலமாக அடைத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் 17 பேரும் இப்போது விடுதலை செய்யப்பட்டு விட்டனர்.

விடுதலை செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் திரு. பொ. சத்தியசிலனும், பொ. வே. திசைவீரசிங்கமும் கடந்த 4 வருடங்களாக தொடர்ச்சியாக சிறைவைக்கப்பட்டிருந்தவர்களாவர். கோட்டைக் கல்லாற்றை சேர்ந்த பூ. நடேசானந்தம் கடந்த இரண்டரை ஆண்டுகள் தொடர்ச்சியாக சிறைவைக்கப்பட்டிருந்தவராவார். ஏனையோர் கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக சிறையிருந்தவர்கள்.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன், ஆனந்தகுமார், பொ. வே. திசைவீரசிங்கம், ஜீவராசா, பரமேஸ்வரன், சதானந்தசிவம் இரத்தினகுமார், தனபாலசிங்கம் ஆகியோர் 12-2-77 சனிக்கிழமையும், சத்தியசிலன், வண்ணை ஆனந்தன், புஷ்பராசா, பூபதி பாலவடிவேற்கரன், பூ. நடேசானந்தன், மாவை. சேனாதிராசா, உரும்பராய் மகேந்திரன், பிரான்சிஸ், ஆகியோர் ஞாயிற்றுக்கிழமையும் (13-2-77) விடுதலைசெய்யப்பட்டனர்.


இவர்கள் விடுதலையாவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், தம்மை வந்து சந்திக்கும்படி அமைச்சர் கே. பி. இரத்திநாயகா தூது அனுப்பியதாகவும், அமைச்சரை சந்திப்பதற்கு தயாராக இல்லை என்று தாமும் ஏனையபெரும்பாலான இளைஞர்களும் ஒரேயடியாக உறுதியுடன் மறுத்துவிட்டதாகவும் கவிஞர் காசிஆனந்தன் தெரிவித்தார்.

கவிஞர் காசிஆனந்தன், நடேசானந்தம் ஆகியோர் மட்டக்களப்புக்கு இன்று (புதன்கிழமை) காலை உதயதேவி மூலம் பயணமாகின்றனர். மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன் உட்பட ஏனைய சில இளைஞர்கள் இன்று காலை யாழ்தேவி மூலம் யாழ்ப்பாணம் செல்கின்றனர்.

தேசிய அரசுப் பேரவை கூட்டம் மூன்று மாதத்துக்கு ஒத்திப்போடப்பட்டதன் காரணமாக அவசரகால விதிகளை இனி மாதாமாதம் புதுப்பிக்கும் வாய்ப்பை அரசாங்கம் இழந்துவிட்டது இதன் காரணமாக இன்றுடன் (16-2-77) அவசரகால விதிகள் தாமாக செயலிழந்து விடுகின்றன. இதன் காரணமாகவே தடுப்புக் காவலிலிருந்த தமிழ் இளைஞர்கள் விடுதலையாகி வெளியே வரமுடிந்தது.

### மட்டுநகரில் வரவேற்பு ஏற்பாடு

16-2-77 காலை உதயதேவி மூலம் மட்டுநகர் செல்லும் கவிஞர் காசி ஆனந்தன், பூ. நடேசானந்தம் ஆகியோருக்கு மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் வைத்து பிரமாண்டமான வரவேற்பு அளிக்கவும், அங்கிருந்து அவர்களை ஊர்வலமாக கல்லடிவரை அழைத்துச் செல்லவும், மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவை சுறுசுறுப்பாக ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. பல ஆயிரக் கணக்கான மக்கள் ரயில் நிலையத்தில் காசியை வரவேற்கத் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



நான்கு ஆண்டுகள் சிறை வாழ்வுக்குப்பின்னர் விடுதலையாகிய இளைஞர் பொ. சத்தியசிலன்.



இரண்டரை ஆண்டுகள் சிறைவாழ்வுக்குப் பின்னர் விடுதலையாகியுள்ள கோட்டைக் கல்லாற்றை சேர்ந்த இளைஞர் பூ. நடேசானந்தம்

### யாழ்ப்பாணத்திலும் வரவேற்பு ஏற்பாடு!

16-2-77 புதன் கிழமை காலை யாழ்தேவியில் புறப்பட்டு யாழ்ப்பாணம் வரும் சிறைமீண்ட இளைஞர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பிரமாண்டமான வரவேற்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### இன்றைய கருத்தரங்கு!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளையினர் நடாத்தும் வாராந்தக் கருத்தரங்கு இன்று புதன் கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி லொறிஸ் வீதி 51ம் இலக்க இல்லத்தில், கொழும்புக்கிளைத் துணைத்தலைவர் திரு. ஆறுமுகம் தலைமையில் நடைபெறுகிறது. கூட்டணிப் பிரமுகர்கள் உரையாற்றுவார்கள்.

### இவ்வாரப் பிரார்த்தனை!

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளை நடாத்தும் இவ்வாரப் பிரார்த்தனை 18-2-77 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு கொழும்பு, திம்பிரிகசாய புனித திரேசாள் ஆலயத்தில் நடைபெறும்.

### கம்பளையிலும் அஞ்சலி!

தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களின் மரணச்செய்தியை கேட்டு கம்பளை வாழ் தமிழ் மக்கள் சகிக்கமுடியாத அதிர்ச்சியடைந்தார்கள். மரணச் செய்தியை கேள்வியுற்றவுடன் திரு. சு. கா. முருகேசு அவர்கள் கடைகளுக்கு மரணச்செய்தியை அறிவித்துள்ளார். ஜாதி மத பேதமன்றி யாவரும் தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தும்முகமாக வெள்ளைகொடிகள் கடைகளிலும் வீடுகளிலும் பறக்க விடப்பட்டது.

## பொன்னா சொன்ன மந்திரம்

"தமிழ்நாட்டுத் தலைநகராம் சென்னையில் வங்கக் கடலோரத்தில் துயிலுகின்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், தமது தம்பிமார்களுக்கும், நாட்டுமக்களுக்கும் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்ற மூன்று கோட்பாடுகளை—மூன்று தத்துவங்களை—மூன்று மந்திரங்களைவிட்டுச் சென்றுள்ளார். அதேபோல கடந்த அரை நூற்றாண்டுகாலம் தமிழினத்துக்குப் பணிபுரிந்து, இன்று பருத்தித்துறை கடற்கரையில்—இந்து சமுத்திரக் கரையோரத்தில் — இன்றையதினம் எரிதழலுடன் சங்கமமாகி, நமது இதயத்தில் நிறைந்துவிட்ட அமரர் ஜீ. ஜீ அவர்களும் நமக்கு—தமிழ் இனத்துக்கு—தமது இறுதிக்காலத்தில் மூன்று மந்திரங்களை தந்துவிட்டுச் சென்றுள்ளார். ஒற்றுமை, தன்மானம், விடுதலை என்பவையே அந்த மூன்று மந்திரங்களாகும். இந்த மூன்று கோட்பாடுகளின் அடிப்படையிலேயே தமிழர் விடுதலைக் கூட்டணி இயங்கிவருகிறது. ஆம், இன ஒற்றுமை, தன்மானம், இன விடுதலை ஆகிய இந்த மூன்றுமே பொன்னா நமக்கு விட்டுச்சென்ற சொத்துக்களாகும். இந்த அடிப்படையில் நின்று தமிழ் இனத்தின் சுதந்திரத்துக்காக உழைப்போம்!

—நாவலர் அமிர்தலிங்கம் (இறுதி அஞ்சலி உரையின்போது கூறியது)

### அரசிலிருந்து வெளி..

—1-ம் பக்கத் தொடர்

யாமலேயே இவ்வாறுசெய்யப்பட்டிருப்பதாகவும், கம்யூனிஸ்ட் கட்சி கடந்த வாரம் அரசாங்கத்தை கடுமையாக சாடியிருந்தது. அரசாங்கத்துடனுள்ள தனது உறவுபற்றி இன்று (16-2-77) கொழும்பில்கூடி கம்யூனிஸ்ட் கட்சி இறுதியாக முடிவு செய்யவிருக்கிறது.

பீட்டர்கெனமனும், டி.பி. சுபசிங்காவும் கடைசியாக நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்துக்கும் போகவில்லையென்று தெரிகிறது.

கம்யூனிஸ்ட் கட்சி அரசிலிருந்து வெளியேறுவதை தொடர்ந்து அமைச்சர் டி. பி. சுபசிங்காவும் வெளியேறக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நந்தா எல்லாவெல உட்பட 4 சிறீலங்கா சுதந்திரக் கட்சி பா. உ.க்கள் அக்கட்சியிலிருந்து சென்றவாரம் வெளியேறிவிட்டனர்.

## கண்ணீர்க்கடலில் கருணாநிதி



தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி கூட்டணி தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவு குறித்து விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியில் பின்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

'பாரெல்லாம் புகழ் பரப்பிய
என் அருமை உடன்
பிறப்பை இழந்துவிட்ட
என் மனதின் துயர்துடைக்க
யார் வருவார் இவ்வுலகில்!
'உண்மையுள்ள தோழமை
உயிர்காக்கும்
நண்பனாக நட்புக்கு இலக்கணமாக
நான் கண்ட நண்பா நின்
ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திப்பதோடு, உனை
இழந்து
தவிக்கும் தமிழர் பரம்
பரைக்கும் குடும்பத்திற்
கும் அனுதாபம் கூறவேண்
டிய இக்கட்டான நிலைக்கு
என்னை ஏன் ஆளாக்கினாய்?
நான் கண்ட நல்லவர்களில்
நெஞ்சுரமும், நேர்மையும்
கொண்ட
சட்டத்துறையின் காவ
லனே-என்
உடன்பிறப்பே! உன்பிரிவை
ஆற்றாமல் ஆடுகின்ற
நெஞ்சங்கள்
கண்ணீரில் உனை காணத்
துடிப்பதை
அறியாமல் மீளாத்துயிலில்
நீ மாய்ந்து
விட்டவேகமென்ன? துணி
வுதான் என்ன?
என் துயரை கேட்டவுடன்
எழுச்சிகொண்டு துணைக்கு
வந்த சிங்கமே,
செந்தமிழ் செல்வனே நின்
சேவையின்
மகத்துவம் செப்புவோர்
கோடியிருக்க
நீ சிரிக்காமல் சிவனே
என்று சாய்ந்துவிட்டதைக்
குலுங்குகிறது மனம்
கொதிக்கிறது நெஞ்சு
நினைக்கிறேன் நீ தந்த
நினைவுகளை
நெஞ்சில் ஒருநெடுஞ்சுமை
நாடுபோற்றும்நல்லவனே
நாமறிந்த
வல்லவனே, தேடி உனை
பலர் கூடி
தீராது ஓலமிட, துஞ்சு
கின்ற உன்
அழகு துலைக்கின்ற தென்
மனதை'!

இவ்வாறு திரு கருணாநிதி தமது அஞ்சலியில் ஜீ.ஜீயை நினைவு கூர்ந்திருக்கிறார்.

முன்னாள் தி.மு.க. அமைச்சர்கள், நெடுஞ்செழியன், திரு. ராசாராம், பா.உ. சண்முகம் உட்பட பலர் தமது அனுதாபங்களை தெரிவித்திருக்கிறார்கள்.

வேப்பெண்ணெய் கலந்த
நீம் வாசனை சோப்
சரும பாதுகாப்பிற்குச் சிறந்தது
ஒரு மில்க்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம்வருடம் பெப்ரவரி மாதம்-16ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org